**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.26** **நாள்: 23.02.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி பள்ளிகள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள், அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் 19 வயதிற்குட்பட்ட மாணவ/ மாணவியர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படவுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

உலக சுகாதார நிறுவனத்தின் கணக்கின்படி இந்தியாவில் 1 முதல் 14 வயதுடைய 24.1 கோடி குழந்தைகள் குடற்புழு தொற்று ஏற்படக்கூடிய அபாய நிலையில் உள்ளனர். இது சராசரியாக 1 முதல் 14 வயதுடைய குழந்தைகளில் 68% ஆகும். எனவே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் இரத்தசோகையினால் குழந்தைகள் அதிக அளவில் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கு இக்குடற்புழு நீக்கும் திட்டம் வருடத்திற்கு 2 முறை பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்று வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் நாடு தழுவிய குடற்புழு நீக்க நாள் 26.02.2018 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து சென்னை ஆரம்ப சுகாதார மையங்களிலும், மாநகராட்சி பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் (ICDS) கீழ் இயங்கும் அங்கன்வாடி மையங்களிலும் அனுசரிக்கப்படவுள்ளது. குடற்புழு நீக்க மருந்து (அல்பெண்டசோல்) மாத்திரை ஒரே நாளில் (26.02.2018) அன்று 16 இலட்சத்து 57 ஆயிரத்து 512 குழந்தைகள் மற்றும் மாணவ/ மாணவியர்களுக்கு வழங்கப்படவுள்ளது. முகாம் நாளான 26.02.2018 அன்று விடுபட்ட குழந்தைகளுக்கு, 01.03.2018 அன்று குடற்புழு நீக்க மருந்து வழங்கப்படவுள்ளது.

இம்முகாமில், பொதுமக்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து சென்னை ஆரம்ப சுகாதார மையங்கள், மாநகராட்சி பள்ளிகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் (ICDS) கீழ் இயங்கும் அங்கன்வாடி மையங்களிலும் 1 முதல் 19 வயது வரையுள்ள குழந்தைகள் மற்றும் மாணவ/ மாணவியர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை கொடுத்து பயன்பெற்றுக் கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**